வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன அவர்களுடனான சந்திப்புக்கு பின்னரான கூட்டுச் செய்தியாளர் மாநாடு

**(06** ஜனவரி **2021: 1300** மணி**;** வெளிவிவகார அமைச்சு**)**

வெளியுறவு அமைச்சரின் ஆரம்ப உரை

எனது மதிப்புக்குரிய நண்பரும் வெளிவிவகார அமைச்சருமான கௌரவ தினேஷ் குணவர்த்தன அவர்களுக்கும்**,**

சிரேஸ்ட அதிகாரிகள்**,** ஊடகம் சார்ந்த நண்பர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் இனிய மாலை வணக்கம்**.**

இலங்கையில் உள்ள எமது நண்பர்கள் அனைவருக்கும், உங்கள் எல்லோருக்கும் 2021 புதுவருட நல்வாழ்த்துக்கள். இலங்கைக்கு மீண்டும் வருகை தருவதிலும் உங்களை சந்திப்பதிலும் நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். ஆயிரக்கணக்கான ஆண்டுகள் பழைமையான நாகரிக உறவினைக் கொண்டிருக்கும் இந்த அழகான நாட்டிற்கு வருகை தருவது தொழில்முறை ரீதியாகவும், தனிப்பட்ட ரீதியாகவும் எப்போதுமே மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது.

2. இவ்விஜயத்துக்கான அழைப்பிற்காகவும், எனது தூதுக்குழுவையும் என்னையும் இலங்கைக்குரிய வழக்கமான விருந்தோம்பலுடன் வரவேற்றமைக்கும் இலங்கை வெளிவிவகார அமைச்சருக்கு நான் நன்றியுள்ளவனாக இருக்கிறேன். ஏறக்குறைய ஒரு வருடத்திற்கு முன்பு அவர் இந்தியாவிற்கான விஜயத்தை மேற்கொண்டிருந்த நிலையில் இந்த அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. ஆனால் கொவிட் தொற்று நோயால் ஏற்பட்ட இடையூறு காரணமாக முன்னர் இந்த விஜயத்தை மேற்கொள்ள முடியவில்லை. ஆனாலும் நான் 2021 ஆம் ஆண்டினை இந்தியாவின் மிக நெருங்கிய நட்பு நாடான இலங்கைக்கான விஜயத்துடன் ஆரம்பிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

3. இரு நாடுகளும் கொவிட் -19 நோயிலிருந்து மேலெழும் கடுமையான மற்றும் பொதுவான சவால்களை எதிர்கொள்ளும் நேரத்தில் நான் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ளேன். அதே நேரத்தில், எம்மிடையிலான மிக நெருங்கிய ஒத்துழைப்பினை மேலும் வலுவாக்குவதற்கு கொவிட் சந்தர்ப்பம் வழங்கியுள்ளது என்று நான் நினைக்கிறேன். அத்துடன் எமது அயலுறவுக்கு முதலிடம் கொள்கையினை பிரதிபலிக்கும் வகையில், சரியான நேரத்தில் வழங்கப்பட்ட மருத்துவ உதவி மூலம் கொவிட்டை சமாளிக்க இலங்கைக்கு இந்தியா ஆதரவளித்துள்ளது. மேலும்

இலங்கையில் சிக்கியிருந்த இந்திய பிரஜைகளை சொந்த நாட்டுக்கு அனுப்புவதில் இலங்கை அரசாங்கத்தின் உதவி மற்றும் ஏற்பாடுகளுக்காக எனது பாராட்டுகளையும் இந்த சந்தர்ப்பத்தில் பதிவு செய்ய வேண்டும். நாங்கள் இப்போது கொவிட்டுக்கு பின்னரான ஒத்துழைப்பு குறித்து நோக்குகின்றோம் அத்துடன் இந்தியாவிலிருந்து தடுப்பூசிகளை பெற்றுக்கொள்வதில் இலங்கை வெளிக்காட்டிய ஆர்வத்தினை இந்தியாவுக்கு எடுத்துச்செல்கிறேன்.

4. எங்கள் இருதரப்பு ஒத்துழைப்பானது கொவிட் காரணமாக முடங்கவில்லை என்பதையும் கவனத்தில் கொள்வது மகிழ்ச்சியளிக்கிறது. கடந்த ஆண்டில் உயர் மட்ட ரீதியிலான தொடர்புகள் பேணப்பட்டு அந்த உறவுகள் பலப்படுத்தப்பட்டன. அத்துடன் பிரதமர் மோடிக்கும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடையிலான மெய்நிகர் இருதரப்பு உச்சி மாநாடு 2020 ஆம் ஆண்டில் எமக்கு ஒரு முக்கியமான அடையாளமாக அமைந்தது.

5. இன்று காலை நான் கௌரவ ஜனாதிபதி கோதாபய ராஜபக்ஷ அவர்களை சந்தித்திருந்தேன். நானும் கௌரவ வெளிவிவகார அமைச்சர் அவர்களும் சற்று முன்னதாக எமது கலந்துரையாடலை நிறைவு செய்துள்ளோம். அந்த கலந்துரையாடலில் எமது பங்குடைமை குறித்த மீளாய்வினை எம்மால் மேற்கொள்ள முடிந்தது. இன்று மாலை கௌரவ பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அவர்களை சந்திக்கவுள்ளேன். முக்கியமான அரசியல் மற்றும் சமூகத்தலைவர்களுடனும் எமது பகிரப்பட்ட ஜனநாயக விழுமியங்களின் அடிப்படையில் சந்திப்புக்களை நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாமல் வர்த்தக துறையினருடனான சந்திப்பொன்றும் நடைபெறவுள்ளது. பரஸ்பர நம்பிக்கை, பரஸ்பர நலன்கள், பரஸ்பர மரியாதை மற்றும் பரஸ்பர உணர்வு ஆகியவற்றின் அடிப்படையில் இலங்கையுடனான உறவினை மேலும் வலுவாக்குவதற்கு இந்தியா தயாராக இருக்கும் அதேநேரம் இலங்கையின் நம்பிக்கைக்குரிய நட்பு நாடாகவும் சிறந்த பங்காளியாகவும் இந்தியா இருக்கும் என்பதே சகல தரப்பினருக்குமான செய்தியாகும்.

6. தற்போது , இந்தியா மற்றும் இலங்கை ஆகிய இரு நாடுகளும் கொவிட்டுக்கு பின்னரான மீட்சிக்கான உடனடி சவால்களை எதிர்கொள்கின்றன. இது ஒரு பொது சுகாதார பிரச்சினை மட்டுமல்ல, ஆனால் சம நேரத்தில் பொருளாதார நெருக்கடியாகவும் அமைகிறது. இந்தியாவைப் பொறுத்தவரை, கொவிட்டினால் பாதிக்கப்படுபவர்களின் என்ணிக்கை வெகுவாக குறைந்துவிட்டன என்பதுடன் தடுப்பூசி ஏற்றுவதற்கான வாய்ப்புக் காணப்படுவதனையும் நீங்கள் அறிவீர்கள். இந்திய பொருளாதாரமும் மீட்கப்படுவதற்கான வலுவான அறிகுறிகளைக் கடந்த சில மாதங்களில் காட்டியுள்ளது. அடுத்த காலாண்டில் இது முழுமையடையும் என்று நாங்கள் நம்புகிறோம். இந்த முன்னேற்றங்கள் இலங்கையில் சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும். அதே நேரத்தில், நிதி

அல்லது வர்த்தக துறையில் மேலெழும் சவால்களுக்கு முகம் கொடுக்கின்ற நிலை காணப்படுகிறது. இருந்தாலும் குறிப்பிட்ட சவால்கள் தொடர்கின்றன. எனது வருகை அந்த செயல்முறையை எளிதாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

7. இத்தகைய வெளிப்படையான ஒத்துழைப்பினைக் கொண்ட இரண்டு அயல் நாடுகளாக, இரு தரப்பு ஒத்துழைப்பை மேலும் பலப்படுத்துவதற்கான சாத்தியங்கள் மகத்தானவை. அவற்றில் சில உடனடி நிவாரணங்களை வழங்க உதவக்கூடும்; ஏனையவை இலங்கையின் வளர்ச்சிக்கு மிகவும் சாதகமான நடுத்தர கால தாக்கங்களைக் கொண்டிருப்பவைகளாக அமைகின்றன. உட்கட்டமைப்பு, எரிசக்தி, தொடர்பாடல் போன்ற பல திட்டங்கள் தொடர்பாக பேசப்பட்டு வருகின்றது. அவற்றினை விரைவாக அமுலாக்குவது பரஸ்பர நலனில் தங்கியுள்ளதுடன் இவை நிச்சயமாக இலங்கையின் பொருளாதார மீட்சியை துரிதப்படுத்தும். இலங்கையில் முதலீடு செய்வதில் இந்திய வணிகத்துறையினர் தீவிரமான அக்கறையினை கொண்டுள்ளனர் என்பதை நான் வலியுறுத்திக் கூறுகின்றேன். மருந்து உற்பத்திக்கான சிறப்பு வலயங்கள் மற்றும் சுற்றுலாத்துறை உள்ளிட்ட சில முக்கியமான வாய்ப்புக்கள் குறித்து நாங்கள் விவாதித்தோம். இவ்விடயம் தொடர்பாக விரைவில் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதனை என்னால் உறுதியாக கூறமுடியும்

8. சமூக மற்றும் மனிதவளத் துறைகள், சமூகங்கள் சார்ந்த இலங்கையின் வளர்ச்சியில் இந்தியா மிகவும் வலுவான பங்களிப்பை கொண்டுள்ளது. இது பாரிய வீட்டுத்திட்டங்கள் அல்லது அம்புலன்ஸ் சேவைகள், மரபுரிமை பாதுகாப்பு அல்லது கல்வி ஆகியவற்றில் இருந்தாலும், எங்கள் பங்குடைமையானது இலங்கை முழுவதிலும் உள்ள மக்களின் வாழ்க்கையில் உண்மையான மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. எங்கள் கடன் வசதிகள் இயல்புநிலையை மீட்டெடுக்கவும் தொடர்புகளை மீளக்கட்டமைக்கவும் உதவுகிறது. விவசாயம் மற்றும் தொழில்நுட்பம், கல்வி மற்றும் திறன் மேம்பாடு மற்றும் நகர்ப்புற மேம்பாடு உள்ளிட்ட இலங்கை அரசாங்கத்தின் முன்னுரிமைகள் மற்றும் தேவைகள் குறித்து நாங்கள் அறிந்திருக்கிறோம். குறிப்பாக, ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ அவர்களும் இலங்கை அரசும் தொழிற்பயிற்சி மையங்களை நிறுவுவதில் ஆர்வத்துடன் செயற்படுவதனை காணமுடிகிறது. நமது எதிர்கால முயற்சிகளில் இந்த முன்னுரிமைகள் மூலம் இயல்பாகவே வழிநடத்தப்படுவோம்..

9. பிராந்தியத்தின் சமாதானம் மற்றும் நலன்புரியினை மேம்படுத்துவதில் இந்தியா ஆர்வமாக செயற்பட்டு வரும் நிலையில் இலங்கையின் ஆட்புல ஒருமைப்பாடு, ஸ்திரத்தன்மை மற்றும் ஒற்றுமை ஆகியவற்றில் இந்தியா மிகுந்த உறிதிப்பாட்டினை கொண்டுள்ளது. உண்மையில் இன நல்லிணக்கத்தை ஊக்குவிக்கும் ஒரு அரசியல் கண்ணோட்டத்திற்காக இலங்கையில் நல்லிணக்க செயல்முறைக்கு எங்கள் ஆதரவு நீண்டகாலமாக உள்ளது. ஒன்றுபட்ட இலங்கைக்குள் சமத்துவம், நீதி, சமாதானம் மற்றும் கௌரவம் ஆகியவற்றுக்கான தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்கள் நிறைவேற்றப்படவேண்டும் அது இலங்கையின் சொந்த நலனில் தங்கியுள்ளது. அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தம் உள்ளிட்ட அர்த்தப்புஷ்டியான அதிகார பகிர்வின் மீதான இலங்கை அரசாங்கத்தின் உறுதிப்பாட்டில் அவை சார்ந்துள்ளன. இதன் பயனாக இலங்கையின் முன்னேற்றமும் செழிப்பும் நிச்சயமாக மேன்மையடையும்.

10. இந்தியப் பெருங்கடலில் உள்ள நாடுகளாக, இந்தியாவும் இலங்கையும் கடல்சார் பாதுகாப்பை உறுதி செய்வதில் பகிரப்பட்ட ஆர்வத்தைக் கொண்டுள்ளன. இது தொடர்பாக இரு தரப்பிடையிலுமான ஒத்துழைப்பின் நீண்ட வரலாறு காணப்படுகிறது. அவசரகால சூழ்நிலைகளில் இந்தியா முதலில் ஆதரவினை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்க விடயம். இந்த ஒத்துழைப்பு தொடர்ந்து வலுவடையும் என்று நான் நம்புகிறேன். அதிகரித்துவரும் கடல் மற்றும் பாதுகாப்பு ரீதியான சவால்களை எதிர்கொள்ள இலங்கையின் திறன்களை மேம்படுத்த நாங்கள் தயாராக இருக்கிறோம்.

11. மீன்பிடி தொடர்பாக நோக்கும்போது, இந்த விவகாரத்தில் இந்தியா-இலங்கை கூட்டு செயலணி சமீபத்தில் சந்தித்தமை குறிப்பிடத்தக்கவிடயம். நிலுவையில் உள்ள அனைத்து பிரச்சினைகள் திறந்த மற்றும் நேர்மையான முறையில் இங்கு விவாதிக்கப்பட்டன. எங்கள் மீனவர்கள் விரைவாக விடுவிக்கப்படவேண்டுமென நாங்கள் எதிர்பார்க்கின்றோம். இது குறித்து மேலும் விவாதிக்க இன்று பிற்பகல் மீன்பிடித்துறை அமைச்சர் கௌரவ டக்ளஸ் தேவானந்தா அவர்களை நான் சந்திக்கின்றேன்.

12. இலங்கை பிம்ஸ்டெக்கின் (BIMSTEC) தலைமையை ஏற்றுக்கொண்ட நிலையில், அடுத்த பிம்ஸ்டெக் மாநாட்டில் பங்கேற்க நாங்கள் தயாராகவுள்ளோம்.

13. இலங்கைக்கு வருகை தருவதற்கான வாய்ப்பினை தந்தமைக்காகவும், ஆக்கபூர்வமான மற்றும் தூரநோக்குடனான கலந்துரையாடல்களுக்காகவும்

எனது மதிப்பிற்குரிய நண்பரும் வெளிவிவகார அமைச்சருமான தினேஷ் குணவர்த்தன அவர்களுக்கு மீண்டும் நன்றி கூறுகிறேன்.

உங்கள் அனைவருக்கும் நன்றி

வணக்கம்.